என் கையில் இல்லை. தனி வினா எழுப்பினால் சொல்ல முடியும். இது 4—5 ஆண்டு காலம் தொடர்ந்து நடைபெற வேண்டிய திட்டமாக இருக்கிறது. ஏனெனில், ஆராய்ச்சி தொடர்ந்து இதில் நடைபெற வெண்டியிருப்பதால்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த மானாவாரி சாகுபடி திட்டத்தின்கீழ் எந்தெந்தப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு, செயல்பட்டு வருகின்றன? அதிலே விவசாயிகளுக்கு என்னென்ன விதமான உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இந்த மானாவாரி திட்டம் குறிப்பாக மழை குறைவாக பெய்யும் பகுதிகளில் எப்படி வேளாண்மை வளர்ச்சியைப் பெருக்குவது என்பதை அடிப்படை நோக்கமாக வைத்து செயல்பட்டு வருகிறது என்றாலும், குறிப்பாக இதிலே மண் வளம், நில வளம், வறட்சிப் பகுதிகளில் எப்படி வளர்ச்சியைப் பெருக்குவது என்பதும், ஆராய்ச்சியின் அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

Experiments on artificial rain making

* 229. *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Agriculture, be pleased to state—

(*a*) whether the State Government have requested the Institute of Tropical Meteorology to conduct artificial rain making in Madras; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Poultry Development Corporation

* 230 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Agriculture, be pleased to state—

(*a*) whether there is any proposal to set up a Poultry Development Corporation in this State; and

(*b*) if so, the details of the same?

1973 நவம்பர் 20]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) விவர அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, இந்த அறிக்கையில் லொகேஷன் ஆபீசிற்காக ரூ. 25,000 ஒதுக்கப் பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே கோழிக்காக எவ்வளவு செலவு செய்யப் போகிறுர்கள்? கோழிப் பண்ணையில் மிகவும் முக்கியமான விஷயம், முட்டையை எப்படி விற்பது என்பதுதான். அதுமட்டுமல்ல, போண்டா கோழி என்று சொல் கிறுர்களே, அதற்கு தீவனம் மிகவும் முக்கியமானது. அதற்குத் தகுந்த தீவனம் இல்லையென்றால் கோழிப்பண்ணை நடத்த முடியாது. ஆகவே, கோழிக்கான தீவன உற்பத்தியைச் செய்வ தற்கு, முட்டைகள் சரியான வகையில் வருவதற்கு, இன்னும் அதிகமான பணம் ஒதுக்கிச் செலவிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இந்த பௌல்டிரி டெவலப்மெண்ட் கழகத்தின் கணக்கு வழக்குகள் பேரவைமுன் விரைவில் வைக்கப்படும். இதற்காக தற்போது ரூ. 25,000 ஒதுக்கப்பட்டிருந்தாலும். எவ்வளவு தொகை இதுவரை செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பது, அதைப் பார்த்தால் தெரியும். தீவனம் என்பது மிகவும் முக்கியம் தான். இருப்பினும், தீவனச் செலவு அதிகமானல் கோழிப் பண்ணை நடத்த முடியாது என்பது என்னுடைய திடமான நம்பிக்கை பலமுறை நான் அந்தத் தீவன உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கு வழி சொல்லி இருக்கிறேன். முட்டை விற்பனையைப் பற்றி இப்போது பிரச்னை எழவில்லை. விற்க வேண்டிய நேரம் வருகிறபோது, சென்னை நகரத்தில் மட்டுமல்ல, மற்ற நகரங்களில் மட்டுமல்ல, வெளி மாநிலங்களில் கூட விற்க முடியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, கோழி இல்லாத கோழிப்பண்ணைகள் பலயிடங்களில் இருக்கின்றன. முதலில் அந்த இடங்களில் கோழிகள் வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா?

@285-291-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பட்டுள்ளது.

[1973 நவம்பர் 20

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இது பௌல்டிரி டெவலப்மெண்ட் பற்றியது. கோழி இல்லாத இடங்களில் கோழிப் பண்ணை வைப்பது என்பதுபற்றி அல்ல. தரமான கோழிக் குஞ்சுகளைத் தயாரித்து, கோழி வளர்க்க விரும்புகிறவர்களுக்குக் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட நிறுவனம் இது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 231.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : It is a very important question. As egg is selling at 42 P., people are suffering a lot. When such an important question is answered, members should be given an opportunity to put supplementaries. We are raising our hands, but we are not able to catch the eye of the Hon. Speaker. We feel really sorry for it.

Levy of Pilgrim tax in Thiruvarangam.

* 231 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Local Administration, be pleased to state whether this Government have recommended to the Centre to permit the Srirangam Municipality to levy pilgrim tax throughout the year during 1972?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

தொழில் வரி வசூல்

* 232 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழில் வரியை வேலை செய்யும் ஊழியர்களின் சம்பளத்திலேயே பிடித்துக் கொள்வது பற்றி அரசு ஆலோசித்து வருகின்றதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : அமைச்சர் அவர்கள் ஆம் என்று பதில் அளித்தார்கள். எந்த வகையிலே செயல்படுத்த இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?